***ஈரான் அதிபரிடமிருந்து பிரதமருக்கு தொலைபேசி அழைப்பு***

ஜூன் 22, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை ஈரான் அதிபர் மாண்புமிகு திரு. மசூத் பெசெஷ்கியான் இன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

2. பிராந்தியத்தில் தற்போதைய நிலைமை, குறிப்பாக ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நடந்து வரும் மோதல்கள் குறித்து, அதிபர் பெஷேஷ்கியான் பிரதமரிடம் விரிவாக விளக்கினார்.

3. சமீபத்திய மோதல்கள் குறித்து இந்தியாவின் ஆழ்ந்த கவலையை பிரதமர் தெரிவித்தார். இந்தியா அமைதி மற்றும் மனிதநேயத்தின் பக்கம் இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். இந்த சூழலில், உடனடியாக பதற்றத்தைக் குறைத்தல், பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரம் ஆகியவை முன்னோக்கிச் செல்வதற்கான வழி என்று பிரதமர் வலியுறுத்தினார். பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கு இந்தியாவின் ஆதரவை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

4. இந்திய சமூகம் பாதுகாப்பாக தாய்நாட்டிற்குத் திரும்புவதற்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் அதிபர் பெஷேஷ்கியானுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மக்களிடையேயான உறவுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த தொடர்ந்து பணியாற்றுவதற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர்.

5. அவர்கள் தொடர்பில் இருக்க ஒப்புக்கொண்டனர்.

புது தில்லி

ஜூன் 22, 2025